# இரத்தினபுரி மாநகர சபை
# இரத்தினபுரி மாவட்டம்

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 18 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இரத்தினபுரி மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கின் ஆரம்ப மீதி 550,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 917,196 கிரயமான நிலையான சொத்துக்கள் ரூபா 1,067,728 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்களின் மீதி ரூபா 150,532 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த 03 வேலைகளுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 647,480 கூட்டுத் தொகையானது கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக மூலதனச் செலவினம் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரியதாக 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 86,065 கூட்டுத்தொகைக்காக கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு

மேற்கொள்ளப்படாமையின் காரணமாக கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 279,500 கூட்டுத்தொகையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2017 நவம்பர் இல் கிடைத்த விருந்தினர் விடுதி வாடகை வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 489,796 தொகையான வாடகை வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் செயற்பட்டு வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்குரிய விருந்தினர் விடுதி வாடகை பா 116,693 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து அறவிட வேண்டிய நிறுவை விருந்தினர் விடுதி வாடகை ரூபா 4,803,635 ஆக இருந்த போதிலும், அப்பெறுமதி ரூபா 7,069,859 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக கடன்பட்டோர் ரூபா 2,266,224 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) வருமானம் சேகரித்தல் விஷேட கணக்கில் செலவு வைக்கப்பட்ட ஆதனவரிக் கட்டணம் ரூபா 2,318,936 தொகை வருமானக் கணக்கிற்கு மாற்றுதல் இரு தடவைகள் பதியப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வருமான சேகரித்தல் விஷேட கணக்குளின் மீதி அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் பிரதம அமைச்சிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த ரூபா 12,558,150 கூட்டுத் தொகையான 05 டெக்ரர்கள், 05 ரேலர் மற்றும் ஒரு முச்சக்கரவண்டி என்பன மூலதனமாக்கப்படாதிருந்ததுடன் மாகாண சமூக நலன்புரி அமைச்சிலிருந்து கிடைத்த 05 தையல் இயந்திரங்களின் பெறுமதி என்பன கண்டறியப்பட்டு மூலதனமாக்கப்படவில்லை.

(ஒ) மீளாய்வண்டிற்குரிய அறிவித்தல் பதாதைக் கட்டணம் ரூபா 482,900 தொகை அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) சபைக்குரிய சினிமா திரையரங்குகளுக்காக மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 680,000 ஆக இருந்த போதிலும் அது ரூபா 136,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக செயற்பாட்டு வருமானம் ரூபா 544,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நிலுவை வாடகையின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 136,000 தண்டப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மேலே (ஓ) பந்தியில் குறிப்பிடப்பட்ட சினிமா திரையரங்குகளுக்காக முன்னைய வாடகையாளரிடமிருந்தும் தற்போதைய வாடகையாளரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 2,633,000 ஆக இருந்த போதிலும், அது ரூபா 551,000 ஆக

காண்பிக்கப்பட்டமையின் காரணமாக கடன்பட்டோர் ரூபா 2,082,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) முன்னைய ஆண்டில் வேலைக் கடன் கொடுத்தோருக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 02 வேலைகளுக்காக மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யும் போது ரூபா 1,217,915 தொகை கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) மீளாய்வாண்டிற்குரிய நிலுவை வியாபார வரி ரூபா 430,800 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 04 நடைமுறைக் கணக்குகளின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பொழிப்பு காசேட்டின் பிரகாரமான மீதிக்கும் இடையில் ரூபா 8,297,141 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) சபையினால் பேணப்பட்டிருந்த பொழிப்பு காசேட்டின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசு மீதி ரூபா 1,173,653 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 663,180 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 510,473 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(இ) வைப்புக் பதிவேட்டிலும் நிதிக் கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்ட வைப்பு மீதிகளுக்கிடையே ரூபா 29,554,297 கூட்டுத் தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டில் பெறுமதி சேர் வரி பெறுவனவு மற்றும் கொடுப்பனவு மற்றும் பொதுப் பேரேட்டில் அந்தக் கணக்குகளுக்கிடையே ரூபா 1,038,842 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(உ) 09 வருமான விடயங்களுகுரியதாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட வருமானத்திற்கும் வருமானப் பதிவேட்டிற்கும் இடையே ரூபா 4,795,646 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

நீண்ட காலமாக அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட சப்ரகமுவ பேரூந்துக் கம்பனியிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,300,000 தொகையை மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை.

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 402,962,895 கூட்டுத்தொகையான 12 கணக்குகள் விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 122 ஆம் பிரிவு | நகரில் உள்ள வீடுகள் மற்றும் கூட்டங்கள் மேற்கூறப்பட்ட அதிகதாரச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு கட்டளை ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்ட வகையில் சுகாதார நிலைமையைப் பேணிச் செய்யப்படுகின்றமை சந்தேகமற்ற வகையில் அறிந்துகொள்ளும் முறையில் நகரில் சகல பகுதியிலும் முன்னரே மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையொன்று நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கட்டிட விண்ணப்பங்கள் தொடர்பான அங்கீகாரம் வழங்கும் போது மாத்திரம் உரிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 571 | 2001 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 6,984,940 கூட்டுத்தொகையான காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | |
| | (i) 03 ஆம் பந்தி | அகற்றப்பட வேண்டிய வாகனங்களை இனங்காண்பதற்காக தகைமை பெற்ற அங்கத்தவர்களை உள்ளடக்கிய விஷேட மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்படாமல் சபையின் வாகன கட்டுப்பாட்டாளரால் அகற்றப்பட வேண்டிய வாகனங்கள் இனங்காணப்பட்டிருந்தன. |
| | (ii) 05 ஆம் பந்தி | அகற்றப்பட வேண்டிய வாகனங்களை மதிப்பீடு செய்வதற்காக கட்டாயமாக இருக்கவேண்டியது என பெயர் குறிப்பிடப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய சபையொன்று நியமிக்கப்படாமல் சப்ரகமுவ மாகாண சபையின் அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் (இயந்திர) மூலம் வழங்கப்பட்ட மதிப்பீட்டு விலையின் அடிப்படையில் 08 வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. |
| (ஈ) | 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | நிறுவனத் தலைவர் மற்றும் பிரதேசத்தின் பிரதேச செயலாளரால் பெயர் குறிப்பிடப்படுகின்ற இரண்டு பிரதி நிதிகளை உள்ளடக்கிய மூன்று நபர் குழுவின் மூலம் தமைமைகள் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படாமல் சங்கத்தின் கோரிக்கைக் கடிதம் மற்றும் அந்த சங்கம் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் இயலுமைச் சான்றிதழ் என்பவற்றை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டுக்கிரயம் ரூபா 5,518,635 கூட்டுத்தொகையான 07 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. |
| (உ) | 2009 மார்ச் 09 ஆந் திகதிய 2009/01 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | |
| | 1.5 ஆம் பந்தி | ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், இரத்தினபுரி பொதுச் சந்தை கடைகளுக்காக 20 வருடங்கள் முதல் வாடகைப் பணம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,817,312 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,927,310 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 32,000,000 | 31,088,136 | 30,494,091 | 26,806,840 | 36,500,000 | 34,424,023 | 31,632,960 | 29,504,918 |
| வாடகை | 63,165,069 | 70,584,039 | 66,602,133 | 27,986,516 | 62,995,894 | 54,058,601 | 48,522,467 | 24,410,254 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 5,997,100 | 2,424,403 | 2,424,403 | - | 6,092,300 | 1,844,884 | 1,844,884 | - |
| ஏனைய வருமானம் | 74,524,800 | 64,260,941 | 64,370,364 | 18,342,730 | 69,429,300 | 63,275,448 | 47,530,588 | 22,133,056 |

#### 2.2.2 வருமான சேகனரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வாடகை மற்றும் ஏனைய வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு, செய்யப்பட்ட அளவை விட முறையே 12 சதவீதத்தாலும், 03 சதவீததிலும் அதிகரித்திருந்ததுடன் வீதவரியும் வரியும், அனுமதிபத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம், பிடியாணைக்கட்டணம் தண்டப்பணமும் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 05 சதவீதத்தாலும், 60 சதவீதத்தாலும் 25 சதவீதத்தாலும் 74 சதவீதத்தாலும் மற்றும் 15 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

**2.2.3 வீதவரியும் வரியும்**

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 26,674,986 ஆக இருந்ததுடன் நிலுவை பணத்தை அறவிடுவதற்கான சபையின் செயற்படுநிலை நலிவான மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே நிலுவை ஆதனவரி மீதி தொடர்பான காலப்பகுப்பாய்வொன்றை வழங்குவதற்கு சபை தவறியிருந்தது.

(ஆ) ஆதனவரி அறவிடுவதற்கான சபை அதிகாரப் பிரதேசத்தின் சகல அசையாத ஆதனங்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தபோதிலும், 1997 ஆம் ஆண்டின் ஆதனவரி மதிப்பீட்டின் பிரகாரம் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டை அமுல்படுத்துதல் பொதுச்சபை மற்றும் நிதிச்செயற்குழுவினால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது தமதப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 மே வரையிலும் புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வாடகை**

---------------

(அ) நகர ஆணையாளரின் 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய கடிதம் மூலம் இரத்தினபுரி நகரத்தின் பள்ளி வீதி, பாதசாரிகளுக்கு, மோட்டார் வாகனங்களுக்கு மற்றும் வடிகாண் முறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற சகல நிரந்தர மற்றும் தற்காலிக நிர்மாணங்கள் மற்றும் நடைபாதை வியாபாரம் என்பவற்றை 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதிக்கு முன் அகற்றுமாறும் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கடிதத்தின் நாள் முதல் இந்த வீதியில் வியாபாரத்தை மேற்கொள்கின்ற நடைபாதை வியாபாரிகளிடமிருந்து கட்டணம் அறவிடாமலும் கைவிடப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் உரிய நிர்மாணங்கள் மற்றும் நடைபாதை வியாபாரம் எதுவும் அகற்றப்படாதிருந்த போதும், மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 77 ஆம் பிரவின் பிரகாரம் அந்த நிர்மாணங்களை அகற்றி நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நடைபாதை வியாபாரத்தின் காரணமாக ஏற்பட்டிருந்த நெருக்கடிகள் எதுவும் அகற்றப்படாதிருந்த போதிலும், உரிய வீதியில் நடைபாதை வியாபாரிகளிடமிருந்து தினமொன்றிற்கு சேகரிக்கப்படுகின்ற ரூபா 5,000 அளவிலான வருமானத்தை சபை இழந்திருந்தது. 2017 ஆகஸ்ட் முதல் 2018 மே வரையான காலப்பகுதியில் அவ்வாறு இழக்கப்பட்ட வருமானங்களின் கூட்டுமொத்தம் அண்ணளவாக ரூபா 1,250,000 ஆக காணப்பட்டது.

(ஆ) இரத்தினபுரி நகரத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான சினிமா திரை அரங்குகளிலிருந்து 2001 மே 01 ஆந் திகதி முதல் 2010 ஏப்ரல் வரை நடாத்திச் சென்ற வாடகையாளரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,953,000 நிறுவை வாடகையை அறவிடுவதற்கோ அல்லது வாடகையாளருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ 2018 மே வரையிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.5 அனுமதிப்பத்திரத்தின் கட்டணம்

மீளாய்வாண்டிற்குரியதாக அறவிடவேண்டிய ரூபா 430,800 கூட்டுத்தொகையான வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,535,848 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 15,028,546 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவை மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நலன் விவகாரம், வசதிகள் மற்றும் நலன்புரிகள் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) எதிர்பார்த்த நலன்கள் (Out come) பெறப்படாமை

நிதி ஆணைக்குழு செயலாளரின் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதிய கடிதம் மூலம் மாநகர சபைகளின் இயலாளவை அபிவிருத்தி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டிற்காக சகல மாகாணச் சபைக்காகவும் ரூபா ஒரு மில்லியன் வீதம் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு மாநகர சபையினாலும் அந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி அமுல்படுத்த வேண்டிய இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரத்தினபுரி மாநகர சபையினால் இணையதள வசதிகள் மூலம் செலுத்தும் நடவடிக்கைகளை இலகுபடுத்துதல் மற்றும் பொது மக்கள் முறைப்பாடுகள்

தொடர்பாக தாமதமின்றி கண்டறிவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன் அதற்காக ரூபா 1,795,000 தொகையான கணனி மென்பொருள் முறைமையொன்று 2016 திசெம்பர் மாதம் வழங்கப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கேள்வி மதிப்பீட்டின் போது முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த மாதிரிகளுடன் கிடைக்கப்பெற்ற கேள்வி மதிப்பின்றி பெறுகைகள் கையளிக்கப்பட்ட நிறுவனம் கையளித்திருந்த மென்பொருள் முறைமையில் காணப்படுகின்ற மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு சகல கேள்விகளும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அதன் காரணமாக பெறுகைகளில் பங்குபற்றிய தரப்பினர்களுக்கு நியாயமாக கையளிக்கப்படாதிருந்ததுடன் மென்பொருள் முறைமை தாபித்தலின் பிரதான இரண்டு நோக்கங்களின் ஒன்றான ‘‘பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக தாமதமின்றி கண்டறிதல்’’ இற்காக தேவையான மென்பொருள் முறைமையொன்றைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(ii) கொள்வனவு செய்யப்பட மென்பொருள் முறைமையில் உள்ளடக்கப்பட் ஆதனவரி முகாமைத்துவ முறைமை 2018 பெப்ரவரி முதல் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், நானாவித வருமானம், நூலக முகாமைத்துவம் மற்றும் இணையதள கொடுப்பனவு வசதி முறைமை 2018 மே வரையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வழங்குனர்களுக்கும் இலவசமாக வழங்குவதாக இணங்கப்பட்டிருந்த இணையதளம் மற்றும் நீர் முகாமைத்துவ முறைமையும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெறப்படாமை**

பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 62,320,000 கூட்டுத்தேவையான 23 வேலைகளை மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

**(ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நகரத்தின பொதுச் சந்தை மற்றும் ஹோட்டல்களிலிருந்து அகற்றப்படுகின்ற மரக்கறிகள் மற்றும் 04 கிராம உத்தியோகத்தர் பிரிவினால் வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படுகின்ற உக்கும் கழிவுகளை பயன்படுத்தி காட்டுப்பசளை உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட போதிலும், 05 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வீடுகளிலிருந்து சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொதிகள் எவ்வித வேறுப்படுத்தலுமின்றி சரிவுடன் கூடிய திறந்த வெளியில் அகற்றப்பட்டிருந்தது. அந்த நிலையினால் சுற்றாடல் மற்றும்

சமூகரீதியில் கணிசமான பிரச்சினைகளுடனான நிலையொன்று ஏற்படக்கூடியதாக இருந்தது.

(ii) மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 2,653,288 தொகையான கணாதெய கழிவுப் பொருள் போடப்படுகின்ற பிரதேசத்தில் பதவியுள்ள அழுக்குகளை மூடிவிடும் வேலையின் ஐ ஆம் கட்டத்திற்காக 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், 2018 மே வரையிலும் அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கழிவுப்பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையிலிருந்து 2016 ஆம் ஆண்டின்போது கிடைத்த 03 இயந்திர உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அந்த செயற்திட்டத்திற்குரிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், கழிவுப்பொருள் மீள் சுழற்சி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவித்திருந்த போதிலும், அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்ககை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விருந்தினர் விடுதி வாடகை**

(i) நகர அபிவிருத்தி பிரிவு செயற்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்ட பேரூந்து நிலையம் மற்றும் சந்தைத் தொகுதி நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கடன் இலக்கம் 1204 ஸ்ரீ (எஸ்எப்) இன் கீழ் ரூபா 54,566,853 கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகத்தின் 2006 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 29/06/24 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் இரத்தனபுரி மாநகர சபைக்கு விருந்தினர் விடுதி வாடகையாக செலுத்தவேண்டிய தொகையில் 50 சதவீதம் 2004 யூலை முதல் மேற்கூறப்பட்ட கடன் தொகையில் ஈடுசெய்யப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு ஈடுசெய்யப்பட்ட பெறுமதி இனங்காணப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டு வரையில் முழுக்கடன் தொகையும் பொறுப்பொன்றாக முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ii) 2013 செப்தெம்பர் முதல் 2017 செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய விருந்தினர் விடுதி வாடகையாக ரூபா 4,442,452 தொகை 2017 நவம்பர் மாதத்தின்போது கிடைத்திருந்தது. எனினும் 2012 மார்ச் 01 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் அந்த காலப்பகுதிக்காக அறவிட வேண்டிய விருந்தினர் விடுதி வாடகை ரூபா 4,598,573 ஆனமையால் ரூபா 156,121 தொகை குறைவாகக் கிடைத்தமை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 4,366,496 கூட்டுத்தொகையான விருந்தினர் விடுதி வாடகை சபைக்கு அறவிடப்படாதிருந்ததுடன் உரிய பணம் நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து அறவிடுவதற்கு அல்லது அந்த நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையில் ஈடுசெய்யப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கேனும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் செயற்திட்டம் - 1632 ஸ்ரீ (எஸ்எப்) இன் கீழ் அமுல்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் வீடமைப்புத்திட்டம் மூலம் இரத்தினபுரி வெறலூப வீதி 2005 ஆம் ஆண்டின் போது அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக சபையினால் செலுத்த வேண்டியிருந்த கடன் பணம் ரூபா 12,656,450 ஆகும். மேற்கூறப்பட்ட வீதி உரிய பிரகாரம் அபிவிருத்தி செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டு வரையிலும் வீதி சபைக்கு கையேற்கப்படாதிருந்ததுடன் கடன் பணத்தை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மொத்தக் கடன் தொகையும் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் முன் கொண்டுவரப்பட்டிருந்த போதும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக சபை எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டில் நடைபெற்ற வாகன ஏல விற்பனையின் போது வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்காக கேள்வி சமர்ப்பித்த ஐந்து வாடிக்கையாளர்கள் பணம் செலுத்தி அந்த வாகனங்களை எடுத்துச் சென்றிருக்கவில்லை. உரிய வாடிக்கையாளர்களுக்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டின்போது இனங்காணப்பட்ட ரூபா 18,384,712 கூட்டுத்தொகையான 09 கண்கக்கீட்டு வழுக்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்காண்பதற்காக முறையான நிகழ்ச்சித்திட்டமொன்று சபைக்குச் சொந்தமாக இல்லாதிருந்ததுடன் கிடைக்கின்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மாத்திரம் அனுமதியற்ற நிர்மாணங்கள் இனங்காணப்பட்டிருந்தது. அந்த நிலைமையின் அடிப்படையில் அனுமதியற்ற நிர்மாணங்கள் மேலும் அதிகரித்துச் செல்லும் அபாயமொன்று காணப்பட்டது. அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு இருந்தது.

(i) இரத்தினபுரி, தெமுவாவத்த, நகரசபை பிரதேசத்தில் அமைந்துள்ள நான்கு மாடிக்கட்டிடத்திற்காக 2011 செப்தெம்பர் 08 ஆந் திகதி அனுமதியற்ற அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்த போதிலும், கட்டிடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2012 மே 09 ஆந் திகதி அரசாங்க பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் அந்த கட்டிடத்திற்காக சபையின் திட்டமிடல் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 யூலை 17 ஆந் திகதி அந்த கட்டிடத்திற்குரிய விண்ணப்பங்கள் சபைக்குக் கிடைத்திருந்த போதிலும் கட்டிடம் குறித்துரைக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்காமையினால் திட்டத்தை அங்கீகரிக்க முடியாதிருந்தது. 2018 மே வரையிலும் உரிய கட்டிடத்தை அகற்றுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இனங்காணப்பட்ட 11 அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு பதிலளிக்கப்படாதிருந்த 09 நிர்மாணங்களை அகற்றுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) மதிலொன்றை நிர்மாணிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பத்திற்கு சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிராத போதும் வீதிக்கு விட வேண்டிய நில எல்லையையும் மீறி உரிய மதில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், சபை அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய கூட்டுமொத்தமாக 06 ஏக்கர் 01 றூட் 02 போர்ச் அளவான 71 காணி அலகுகள் மற்றும் அளவு இனங்காணப்படாதிருந்த 98 காணி அலகுகள் என்பன வெளித்தரப்பினரால் அனுமதியற்ற வகையில் கைப்பற்றப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த ஆதனங்களை மீளக் கையேற்றலோ அல்லது சட்டரீதியான நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் என்பன இனங்காணப்படாதிருந்ததுடன் ரூபா 22,000,000 கூட்டுத்தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான வான் வண்டியொன்றின் மேற்பகுதி முழுமையாக துருப்பிடித்ததிருந்தமை, சகல ஆசனங்கள் மற்றும் வளிச் சமநிலையாக்கி முறைமை பழுதுபார்க்கக்கூடிய நிலையில் காணப்பட்டமை மற்றும் ரிம்செட் ஒன்று முழுமையாக துருப்பிடித்திருந்தமை போன்ற குறைபாடுகளின் காரணமாக மீண்டும் உபயோகிக்கப்பட (Recondition) மேற்பகுதியை வைத்து வண்டியைப் பழுதுபார்ப்பதற்காக 2016 ஆம் ஆண்டின் போது பெறுகைகள் கோரப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கூறுவிலை கோரல் கடிதம் 05 நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அதில் இரண்டு நிறுவனங்கள் போலியானதாக இருந்தன. குறித்த 02 நிறுவனங்கள் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்ததுடன் ஆகக் குறைந்த கேள்வி சமர்ப்பித்திருந்த நிறுவனம் முற்பணம் கோரியிருந்தமை மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் கவனத்திற் கொண்டு இரத்தினபுரி பிரதேசத்தில் கூறுவிலை கோரப்பட்டிருந்த ஒரே நிறுவனத்துக்கே பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) சபையினால் 2016 ஒக்தோபர் 20 ஆந் திகதி வான் வண்டி பழுதுபார்ப்பதற்காக கையளிக்கப்பட்டிருந்தது. பின்னர் நகர ஆணையாளரின் 2016 ஒக்தோபர் 23 ஆந் திகதிய கடிதம் மூலம் மீண்டும் அறிவிக்கும் வரை பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தும்படி அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் 20 ஆந் திகதிய கடிதம் மூலம் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்குமாறு அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பழுதுபார்த்தலின்றி 16 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் உரிய கராஜில் தரித்து வைக்கப்பட்டிருந்த வாகனம் 2018 மார்ச் 02 ஆந் திகதி மீண்டும் சபைக்கு எடுத்துவரப்பட்டிருந்ததுடன் 2018 யூன் வரையிலும் பழுதுபார்த்தலுக்காக அனுப்புதலோ அல்லது விற்றுத்தீர்க்கவோ இன்றி துருப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2004 யூலை 28 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த முச்சக்கர வண்டியின் வைப்பர் மற்றும் மேல்நாட்டு என்பன முழுமையாக துருப்பிடித்திருந்தமை, கூரை முழுவதும் கென்வஸ் துணி புதிதாக இடவேண்டியமை மற்றும் சீட் முழுமையாக புதிதாக இடவேண்டியமை போன்ற குறைபாடுகளின் காரணமாக வாகனம் பழுதுபார்க்கப்பட வேண்டியதாக வாகனத்தின் சாரதியினால் 2016 யூலை 07 ஆந் திகதிய கடிதம் மூலம்

அறவிக்கப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரணங்களின் அதிகாரசபையினால் மாவட்ட இயந்திர பொறியியலாலரால் உடைந்த கழிவுப்பொருட்களை அகற்றும் திட்டத்தின் கீழ் அந்த வண்டியை அகற்றுமாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. பின்னர் அந்த வண்டியை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சபை தீர்மானித்திருந்ததுடன் மாவட்ட இயந்திரப் பொறியியலாளரால் முச்சக்கர வண்டி ரூபா 125,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதாவது 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி மேற்கொண்ட பரிசோதனையின் பிரகாரம் முச்சக்கர வண்டியின் அடிப்பகுதி முழுமையாக துருப்பிடித்திருந்தது என்பது பிழையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. செயற்படு நிலையில் காணப்படுகின்ற முச்சக்கர வண்டியை 2018 யூன் வரையிலும் பழுது பார்த்து பாவனைக்கு எடுப்பதற்கோ விற்றுத் தீர்த்தலோ இன்றி சபைக்குரிய களஞ்சியத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்த் மேற்கொள்ளப்படாமை

1992 ஆம் ஆண்டின் போது யுனிசெப் (UNICEF) நிதியுதவியின் கீழ் கிடைக்கப்பெற்ற கெப் வண்டியொன்று 2004 ஒக்தோபர் 03 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்ததுடன் அதன் இயந்திரம் வெடித்துச் சென்றதால் அரசாங்கத்திற்கு பாரியளவிலான நட்டம் ஏற்பட்டிருந்தது. விபத்தின் பின்னர் வண்டி பழுதுபார்க்கப்படாதிருந்ததுடன் 2016 செப்தெம்பர் 09 ஆந் திகதி ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் 37(3) உபபிரிவின் பிரகாரம் பெறப்பட வேண்டிய பயன்படுத்தப்படாத சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2008 சனவரி 01 ஆந் திகதி முதல் 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக நிலுவை வருமான அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 75,384 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கெப் வண்டியை பழுதுபார்ப்பதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு 2004 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்ததுடன் உதிரிப் பாகங்களுக்காக செலவாகின்ற ரூபா 500,000 இற்கு மேலதிகமாக ரூபா 96,150 தொகையான மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2005 மார்ச் 22 ஆந் திகதி காப்புறுதி மேவுகை மூலம் ரூபா 125,037 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், மிகுதியை பழுதுபார்த்தலுக்குரிய சிட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் செலுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காப்புறுதி மேவுகை மூலம் செலவினங்களை மீளளிப்புச் செய்யும் இயலுமை காணப்பட்ட போதும், வண்டியை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் அது காராஜிற்குள் பாதுகாப்பற்ற வகையில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2007 ஏப்ரல் 30 ஆந் திகதிய 3(20) ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் மூலமும் கெப் வண்டி பழுதுபார்க்கப்பட வேண்டியதாக தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 2010 பெப்ரவரி 05 ஆந் திகதிய இரத்தினபுரி டிப்போ பொறியியலாளரின் கடிதம் மூலமும், வண்டியை பழுதுபார்க்குமாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த சிபாரிசு கவனத்தில் கொள்ளப்படாமல் 10 ஆண்டுகள் அளவில் நகர சபை வாகனத் தளத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்த கெப் வண்டி 2016 செப்தெம்பர் 09 ஆந் திகதி ரூபா 1,145,000 இற்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஈ) விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் இலக்கம் 104(4) இன் பிரகாரம் இடம்பெற்ற பரீட்சிப்பின் இறுதி அறிக்கையின் பிரகாரம் சாரதி குற்றதிழைத்திருந்த போதிலும், அவர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 சனவரி 26 ஆந் திகதி ரூபா 320,000 செலவில் 02 கொங்கிறீட் கலவை இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிலிருந்தும், அடுத்த 02 இயந்திரங்களும் வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும் பயன்படுத்த முடியாது செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) வாகனம் கழுவும் செயற்பாடுகளுக்காக சபையினால் 2016 யூலை 15 ஆந் திகதி முதல் ரூபா 335,0000 செலவில் வாகனம் கழுவும் இயந்திரம் (Service Machine) கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இரண்டு வருடங்களுக்கு அண்மித்த காலமாக அந்த இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது. 2018 மே மாதம் இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், சில தினங்களுக்குள் செயலிழந்து காணப்பட்ட போதும் 2018 யூன் 18 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 இனங்காணப்பட்ட நட்டம்

சபையின் முன்னாள் வேலை அத்தியட்சகரினால் 2013 மே 28 ஆந் திகதி முதல் பயன்படுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று 2016 பெப்ரவரி 02 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லை. பின்னர் சபையின் அங்கீகாரமும் இன்றி மோட்டார் சைக்கிள் பழுதுபார்ப்பதற்காக கராஜிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அது தரித்து வைக்கப்பட்டிருந்த போது 2016 ஒக்தோபர் 18 ஆந் திகதி தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான லொறியொன்றுடன் மோதி மீண்டும் விபத்திற்குட்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரண்டாவது விபத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்த்தல் தொடர்பாக ரூபா 108,750 தொகையான மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

விபத்து ஏற்பட்ட திகதியளவில் வரையிலும் காப்புறுதி பூட்கை வலுவற்றதாக இருந்தமையின் காரணமாக நலன் செலுத்த முடியாதிருந்ததாக காப்புறுதிக் கம்பனி அறிவித்திருந்தது. எனினும், 2016 மே 31 முதல் 2017 மே 30 ஆந் திகதி வரையான கால எல்லைக்காக காப்புறுதிப் பூட்கை புதுப்பித்தல் கட்டணமாக ரூபா 11,407 தொகை 2016 மே 26 ஆந் திகதி செலுத்தப்பட்டிருக்கும் போது காற்றுப் பூட்கை வலுவிலந்தமைக்கான காரண விடயம் தொடர்பாக காப்புறுதிக் கம்பனியிலிருந்து விசாரணை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏற்பட்ட இரண்டாவது விபத்து லொறியின் சாரதியின் தவறினால் ஏற்பட்டிருந்த போதிலும், அவரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்திய உத்தியோகத்தர் 2016 ஒக்தோபர் 15 ஆந் திகதி ஓய்வு பெற்றுச் சென்றிருந்த போதிலும், அவரின் பொறுப்பில் காணப்பட்ட மோட்டார் சைக்கிள் முறையாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது அவருக்கு உரித்தான ஓய்வூதிய நலன் 2018 சனவரி 16 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நகர ஆணையாளரின் கட்டளையின் பிரகாரம் சபையின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட 2017 செப்தெம்பர் 18 ஆந் திகதிய விசாரணை அறிக்கையின் மூலம் மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்திய உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 மே வரையிலும் அந்த சிபாரிசு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2018 யூன் வரையிலும் உரிய மோட்டார் சைக்கிள் எவ்வித பழுதுபார்த்தலுமின்றி நகரசபை களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.7 பெறுகைகள்

### 3.7.1 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 வழங்கல் மற்றும் சேவைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 821,560 செலவில் சபையின் வாகனங்களுக்குத் தேவையான டயர் மற்றும் ரியூப் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பெறுகை கோரல், மதிப்பீடு மற்றும் பெறுகை கையளிக்கும் போது ஏற்பட்டிருந்த வழுவின் காரணமாக சபை நிதியத்திற்கு ரூபா 88,204 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) பெறுமதிசேர் (VAT) பட்டியலொன்று சமர்ப்பிக்காமல் எந்தவொரு வழங்கல்களுக்காகவும் பெறுமதிசேர் வரி செலுத்த முடியாதிருந்த போதிலும், சபைக்காக டயர் கொள்வனவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட VAT பதிவு இலக்கமின்றிய பட்டியல்களுக்காக முழுப்பெறுமதியும் (வரியுடன்) செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 70,834 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 308,000 செலவில் சபைக்காக கொங்கிறீட் கலவை இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதற்குரிய கேள்வி மதிப்பீட்டின் போது ஏற்பட்டிருந்த வழுவின் காரணமாக ஆகக்குறைந்த விலை நிராகரிக்கப்பட்டு அதிக விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு பெறுகைகள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் பொருள் கிடைத்ததன் பின்னர் மாதிரிகளுக்கு இனங்காணதிருந்ததாகக் கூறி இயந்திரத்தை மீள இனங்காணதிருந்ததாகக் கூறி இயந்திரத்தை மீள எடுத்துச் செல்லுமாறு உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2018 யூன் வரையிலும் இயந்திரம் மீள எடுத்துச் செல்லப்படாதிருந்ததுடன் சபையின் தேவையினை நிறைவேற்றுவதற்காக வேறொரு இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.3 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 1,106,504 தொகையான மஹலவத்த முதலாம் குறுக்கு வீதிக்கு மதகுடன் கொங்கிறீட் இடுவதற்காக 2017 நவம்பர் 16 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், மாதமொன்றிற்குள் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2018 யூன் வரையிலும் அந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெள்ளம் மற்றும் மண்சரிவு தாக்கத்திற்குட்பட்ட வீதிகளை புனரமைப்பதற்கும் நிர்மாணிப்பதற்குமான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மிஹிந்துகம அத்கம் வீட்டு வீதியில் பக்கச் சுவரினை நிர்மாணிக்கும் வேலைக்காக 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதி இரத்தினபுரி பிரதேச செயலகத்திலிருந்து ரூபா 1,066,987 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இரத்தினபுரி பிரதேச செயலாளரினாலும் நகர ஆணையாளரினாலும் 2017 ஒக்தோபர் 11 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2017 நவம்பர் 25 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணத்தின் வேலைகள் பூர்த்தி செய்ய வேண்டிக் காணப்பட்டது. எனினும் தெரிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புக்களுக்கு ஒப்பந்தம் கையளித்தல் 2017 நவம்பர் 16 ஆந் திகதி வரையிலும் தாமதமாகியிருந்தது.

(ii) 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும், ஒப்பந்தகாரரால் காலத்தை நீடிப்பதற்காக கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கைகளின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் ரூபா 20,843 தொகை தாமதக் கட்டணமாக அறவிட வேண்டியிருந்தது.

(iii) இரத்தினபுரி பிரதேச செயலாளரின் 2017 திசெம்பர் 08 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2017 திசெம்பர் 15 ஆந் திகதி வரை மாத்திரம் திகதி நீடிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் திகதி நீடிக்கப்பட முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வேலை பூர்த்தி செய்தலில் தாமதத்தின் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் கிடைக்காது போகும் அபாயமும் காணப்பட்டது.

(இ) மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,168,527 தொகையான மூவகமகந்த விவேகாறாம பன்சல அருகில் பக்கச் சுவர் நிர்மாணிக்கும் வேலையின் வேலைகள் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டதாக 2017 திசெம்பர் 22 ஆந் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தரால் வேலைப்பூர்த்தி அறிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவு சிட்டையின் பிரகாரம் மண் நிரப்புவதற்காக ரூபா 25,712 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2018 பெப்ரவரி 19 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பக்கச்சுவருக்கும் வீதிக்குமிடையே மண் நிரப்பப்படாத இடங்கள் அவதானிக்கப்பட்டன. கிரய மதிப்பீட்டின் பிரகாரம், பாதுகாப்பு வேலியொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 25,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) (i) உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 5,598,069 தொகையான இரத்தினபுரி நகர மண்டபத்தின் முதலாவது மாடியை அபிவிருத்தி செய்யும் வேலைக்குரிய (வளிச் சமநிலையாக்கி, டய்ல் பதித்தல் மற்றும் மலசலகூட திருத்தம்) கேள்வி கோருதல் 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையை கைச்சாத்திடல் 2016 யூலை 04 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 25 ஆந் திகதி வரை நிர்மாணத்தின் தினம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தகாரர் மற்றும் சபைக்கிடையே ஏற்பட்ட இணக்கமின்மையின் காரணமாக நிர்மாணத்தின் நடவடிக்கைகள் இடைநடுவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. உரிய பிரச்சினைகளைத் தீர்த்து நிர்மாண வேலைகளை மீள ஆரம்பிப்பதற்கு 2018 யூன் வரையிலும் சபை தவறியிருந்தது.

(ii) 2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதியளவில் நகர மண்டபத்தின் வளிச் சமநிலையாக்கி இயந்திரம் பொருத்தப்பட்டு அதற்காக ரூபா 3,718,220 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், வளி சமநிலையாக்கி இயந்திரத்தை அமுல்படுத்தும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு தேவையான ஏனைய நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 2018 யூன் வரையிலும் அந்த இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 85 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 75,172,500 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 33 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 37,758,380 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாட்டில் 80 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்குகளில் இருந்து கைவிடல் |
| | (ii) நிர்ணயிக்கப்பட்ட இலாபம் இனங்காணப்படாமை. |
| | (iii) நிதிக்கூற்றுக்கள் பட்டோலைகளுடன் இணங்காமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) சொத்துக் கட்டுப்பாடு | (i) விளைவற்ற சொத்துக்கள் காணப்பட்டமை |
| | (ii) மாநகர சபைக்குச் சொந்தமான காணிகளில் அனுமதியற்ற நிர்மாணங்கள் காணப்பட்டமை. |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) நிதிஏற்பாட்டை விஞ்சியமை |
| | (ii) நிதிஏற்பாடுகளில் சேமிப்புக்கள் காணப்பட்டமை |
| (உ) ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்த வேலைகளில் நீண்ட தாமதம் காணப்பட்டமை |